## 57. எங்க துதியெல்லாம் உமக்குத்தானே

### பல்லவி

எங்க துதியெல்லாம் உமக்குத்தானே
எங்க கனமெல்லாம் உமக்குத்தானே

### அனுபல்லவி

*எங்களுக்கல்ல கர்த்தாவே எங்களுக்கல்ல*
*உங்க நாமம் மகிமைபட வேண்டுமே*

### சரணங்கள்

1. பரலோகத்தில் வாசம் செய்யும்
பரிசுத்தரே உம்மை துதிக்கிறோம் ஐயா
சிங்காசனத்தில் வீற்றிருப்பவரே
எல்லா மகிமைக்கு பாத்திரர் ஐயா
- எங்க துதியெல்லாம்

2. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று
ஓயாமல் உம்மை துதிக்கிறார்களே
கேருபீன்கள் சேராபீன்களும்
ஓயாமல் உம்மை புகழ்கிறார்களே
- எங்க துதியெல்லாம்

3. அல்பா ஒமெகா நீர்தான் ஐயா
ஆதியும் அந்தமும் நீர்தான் ஐயா
இருபத்துநான்கு மூப்பர்களும்
உம்மை பணிந்து தொழுகிறார்களே
- எங்க துதியெல்லாம்